1972 ஆகஸ்ட் 12]

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்களால் அன்பளிப்பாக வழங்கப்படும் டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகளை பெறுவதற்கு வழிவகை ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் அது எந்த வகையில் நிறைவு செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வருமானால் அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனையா: டிராக்டர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு முழு மானியத் தொகை அடிப்படையில் அளிக்கப்படுகிறதா? அதில் திருபுவனம் போன்ற ஒன்றிரண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்படவில்லையே, அமைச்சர் தலையிட்டு இதுபோல டிராக்டர்கள் வழங்கப்படாத ஒன்றியங்களுக்கு வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுவிட்டனவா? வழங்கப்படாமல் இருந்தால் இனியேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கொடுக்காதிருந்தால் அது பற்றி கவனிக்கப்படும்.

Bus taken over by Government

* 113 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government have paid compensation for the take over of buses from the private bus owners for the period 1970–71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1970-71-ஆம் ஆண்டில் தனியார் பேருந்துகள் எதையும் அரசு நாட்டுடைமையாக்கவில்லை. எனவே இழப்பீடு தருவது பற்றிய வினா எழவில்லை.

புறநகர்ப் பேருந்துகளிலிருந்து வருமானம்

* 114. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புறநகர்ப் பகுதிகளில் ஓடுகின்ற அரசுப் பேருந்தின் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புறநகர் வழித்தடங்களில் பேருந்து பணிகளை இயக்கியதன் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகை ரூபாய் 67,57,975 ஆகும்.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொகை அதற்கு முந்திய ஆண்டை விட குறைவானதா, அதிகமானதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை.

Nagercoil–Trivandrum buses

* 115 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the total number of buses operated by the Tamil Nadu Government between Nagercoil and Trivandrum; and

(*b*) whether night services are to be introduced in this route?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துத் துறை, நாகர்கோயில்—திருவனந்தபுரம் வழித்தடத்தில் 13 பேருந்துப் பணிகளை நடத்தி வருகிறது. நாகர்கோவில்—திருவனந்தபுரம் வழித்தடத்தை இணைக்கும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் வழியே செல்லும் ஒரு பேருந்துப் பணி இதில் அடங்காது.

(இ) இல்லை.

அரசு மருத்துவர்களின் குடியிருப்புகள்

* 91. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர்கள் தாங்கள் பணிபுரியும் அரசாங்க மனைகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் தங்கள் குடியிருப்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விதி ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாடு மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்படி, அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள் தங்களுக்கு அரசாங்கக் குடியிருப்பு இல்லங்கள் அளிக்கப்படாவிட்டால், தங்கள் வசதிப்படி நோயாளிகளுக்கு பகலிலோ, இரவிலோ மருத்துவ உதவி அளிக்கத் தயாராக மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே குடியிருக்க வேண்டும்.

சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்